## இலங்கை நீதிபதிகள் நிறுவனம் - 2013

இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவன அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நிறுவனத்திற்குச் சொந்தமான அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், நூலகப் புத்தகங்கள், கணனிகள், கணனி துணைப்பாகங்கள் மற்றும் மின்னியல் பொருட்கள் அடங்கலாக சகல சொத்துக்களும் அச்சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலத்தினை கருத்திற்கொள்ளாது ஆண்டிற்கு 10 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தன.

**2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் | |
| i. நிதிப்பிரமாணம் 228 | குறித்த செலவினக் கணக்கின் விபரங்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் முகப்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| ii. நிதிப்பிரமாணம் 1646 | நிறுவனத்தின் குழாம் வாகனங்களிற்குரிய நாளாந்த ஓட்டப் பதிவேடுகளும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சுற்றறிக்கை ஏற்பாடுகள் | |
| 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/நூலக/1 ஆம் இலக்க தேசிய நூலகங்கள் மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபையின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | நிறுவனத்தினால் நூலகப் புத்தகங்கள் தொடர்பில் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் படி மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 2,131,221 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,340,626 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 7,471,847 ஆன முன்னேற்றத்தைக் காண்பித்தது. மொத்தச் செலவினம் ரூபா 1,947,071 ஆல் அதிகரித்திருந்த போதிலும் ஆண்டிற்கான பெறுவனவுகள் ரூபா 9,418,918 ஆல் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிசார் செயலாற்றல் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

ii. நிறுவனத்தின் பௌதீக செயலாற்றலின் படி, மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு இலக்குகளை அடைந்துகொள்ளல் கீழே தரப்பட்டுள்ளது.

| செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி விடய இல. | விபரம் | இலக்குகள் | | அடைவுகள் |
|---|---|---|---|---|
| | | நிதிசார் | பௌதீக | |
| | | ரூபா | | |
| 01 | புதிதாக நியமிக்கப்பட்ட நீதிபதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,500,000 | 30 நீதிபதிகள் | நடாத்தப்படவில்லை |
| 03 | தொழில் நியாயசபைகளின் தலைவர்களிற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (வை-பை இணையதள வசதி) | 808,000 | 385 தொழில் நியாயசபைகளின் தலைவர்கள் | 105 தொழில் நியாயசபைகளின் தலைவர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டனர். |
| 05 | கேட்போர் கூடத்திற்கு குளியல் அறையினை நிர்மாணித்தல் | 1,000,000 | 2 அறைகள் | நடாத்தப்படவில்லை |
| 08 | கணனிகள் மற்றும் இணையத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு பாடநெறிகள் | 100,000 | 20 பாடநெறிகள் | நடாத்தப்படவில்லை |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட இலக்குகளை அடைதல் மிகவும் நலிவான மட்டத்தில் இருந்தமை வெளிப்பட்டது.

**05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவன அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவின் படி, நிறுவனத்தின் ஒவ்வோர் ஆண்டிற்குமான கணக்குகள், நிதியாண்டு முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 10 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தினது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) திட்டமிடல்